**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 72/2024**

**ம.சா. 2**

நாள்: 04.06.2025

2025ம் ஆண்டு ஜூன் திங்கள் 04ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காளியம்மாள் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் இவ்விபத்தில் இறந்துபோனவரின் மருமகள். நான் 1ம் மனுதாரரின் மனைவியாவேன். மற்ற மனுதாரர்கள் அனைவரும் திருமணம் ஆகி தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக புகாரை எனது மாமியார்தான் கொடுத்தார். விபத்து நடந்த பிறகு சுமார் 45 நாட்கள் எனது மாமியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் சரிதான்.

விபத்து சமயத்தில் எனது மாமியாருக்கு 70 வயது இருக்கும் என்றால் சரிதான். எனது மாமியார் வீட்டில் இருந்த சமயம்தான் இறந்தார் என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலையானது திருச்சியிலிருந்து இராமேஸ்வரம் செல்லும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். எனது மாமியார் குளத்தில் குளித்துவிட்டு தேசிய நெடுஞ்சாலையை கடக்க முயற்சி செய்தபோது இந்த விபத்து நடந்தது என்றால் சரிதான். தேசிய நெடுஞ்சாலையை கடக்க முயற்சிக்கும்போது இருபக்கமும் வரும் வாகனங்களை கவனித்துவிட்டுதான் கடக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால் எனது மாமியார் இருபக்கமும் வந்த வாகனங்களை கவனிக்காமல் சாலையை கடந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் வீட்டில் இருந்தேன் என்றால் போன் செய்து சொன்னார்கள், நாங்கள் வந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு எடுத்துச்சொன்றோம்.

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும், எனது மாமியாருக்கு விபத்தில் இறப்பு ஏற்பட்டதால் அதற்காக இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .